# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශේෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/9 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/9 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(50)/75.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதி யால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

நுவரெலியா,
1975 ஏப்பிறல் 19.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (மறியற்சாலை விதிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் மாறாக எது எவ்விதம் இருப்பினும், இவ்வொழுங்குவிதிகள், பயனுடையனவாதல் வேண்டும்.

3. செயலாளர் இலங்கையின் எநத இடத்தையும் மறியற்சாலையாக நியமிக்கலாம் ; அத்துடன் அதற்ிணங்க அத்தகைய இடமானது, மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நோக்கங்களுக்கான மறியற்சாலை ஒன்றாகக் கருதப்படல் வேண்டும்.

4. மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 94 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர் பாகவும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பாகவும், அவை தொடர்பில் விதிகள் தேவையானவை அல்லது உகந்தவை என்று செயலாளர் கருதக்கூடிய மறியற்சாலை அல்லது மறியற்காரர் பற்றிய வேறேதேனும் கருமங் களினும் செயலாளர் விதிகளை ஆக்கலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளில், " செயலாளர் " என்பது நீதியமைச்சின் செயலாளர் என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.